The borrower(s) are hereby advised to comply with the demand notice(s) and pay the demand amount mentioned therein and hereinabove within 60 days from the date of this publication together with applicable interest, late payment penalty, bounce charges, cost and expenses etc. till the date of realization of the payment. The borrower(s) may note that UGRO Capital Limited is a Secured Creditor and the loan facility availed by the borrower(s) is a secured debt against the immovable property(ies) being the secured asset(s) mortgaged by the borrower(s) with UGRO Capital Limited.

In the event, the borrower(s) are failed to discharge their liabilities in full within the stipulated time, UGRO Capital Limited shall be entitled to exercise all the rights under Section 13(4) of the Act to take possession of the Secured Asset(s) including but not limited to transfer the same by way of sale or by invoking any other remedy available under the Act and the Rules thereunder in order to realize the dues in the loan account of the borrower(s). UGRO Capital Limited is also empowered to ATTACH AND/OR SEAL the Secured Asset(s) before enforcing the right to sale or transfer. Subsequent to the sale of the Secured Asset(s), UGRO Capital Limited also has a right to initiate separate legal proceedings to recover the balance dues, in case the value of the Secured Asset(s) is insufficient to cover the dues payable by the borrower(s) to UGRO Capital Limited. This remedy is in addition and independent of all other remedies available to UGRO Capital Limited under any other law.

The attention of the borrower(s) is invited to Section 13(8) of the Act in respect of time available, to redeem the Secured Asset(s) and further to Section 13(13) of the Act, whereby the borrower(s) are restrained/prohibited from disposing or dealing with the Secured Asset(s) or transferring the same by way of sale, lease or otherwise (other than in ordinary course of business) any of the Secured Asset(s) without prior written consent from UGRO Capital Limited and non-compliance of the above is an offence punishable under Section 29 of the Act. The copy of the demand notice(s) is available with the undersigned and the borrower(s) may, if they so desire, collect the same from the undersigned.

**Date: 20/07/2026** — **Sd/- (Authorized Officer)**
**Place: CHENNAI, TAMIL NADU** — **For UGRO Capital Limited, authorised.officer@ugrocapital.com**

## NIDO HOME FINANCE LIMITED

**(formerly known as Edelweiss Housing Finance Limited) (Nido), Registered Office Situated At Tower 3, Wing 'B', Kohinoor City Mall , Kohinoor City, Kirol Road, Kurla (West), Mumbai – 400 070. Regional Office Address: - No.19, 7th Floor, Kochar Towers, Venkatnarayana Road, T.Nagar, Chennai - 600 017.**

### E-AUCTION – STATUTORY 15 DAYS SALE NOTICE

Sale by E-Auction under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and The Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to public in general and in particular to borrower and guarantor that below mentioned property will be sold on **"AS IS WHERE IS , "AS IS WHAT IS" AND "WHATEVER THERE IS"** for the recovery of amount as mentioned in appended table till the recovery of loan dues. The said property is mortgaged to **M/s Nido Home Finance Limited (formerly known as Edelweiss Housing Finance Limited)** for the loan availed by Borrower(s), Co borrower(s) and Guarantor(s). The secured creditor is having physical possession of the below mentioned Secured Asset.

| Sl. No. | Name of Borrower(s)/Co Borrower(s)/ Guarantor(s) | Amount of Recovery | Reserve Price and EMD | Date & Time of the Auction |
|---|---|---|---|---|
| 1. | **THANGAVEL MUTHUR DURAIYAN (Borrower ) & TAMILSELVI KUPPAN (Co Borrower)** | **Rs.1,23,24,637/-** (Rupees One Crore Twenty Three Lakhs Twenty Four Thousand Six Hundred Thirty Seven Only) as on 18.06.2026 + further Interest thereon + Legal Expenses **FOR L0450MTHL000005333842** | **Rs.1,05,22,098/-** (Rupees One Crore Five Lakhs Twenty Two Thousand Ninety Eight Only) **Earnest Money Deposit Rs.10,52,210/-** (Rupees Ten Lakhs Fifty Two Thousand Two Hundred Ten Only ) | **11-08-2026 Between 11 am to 12 pm Noon (With 5 Minutes Unlimited Auto Extensions)** |

**Date & Time of the Inspection: 27-07-2026 between 11.00 am to 3.00 pm** — **Physical Possession Date:- 10-06-2026**

**Description of the secured Asset:** In Tiruppur Registration District, Tiruppur Joint-1 Sub Registration District, Tiruppur Taluk, No.4 Chettipalayam Village, In S.F.No.96 At Present Sub Division In S.F.No.96/1 In Acre 5.56 Extent Of Land In 4425 Sq.Ft Of Land Within The Following Boundaries And Measurements :-East Of - Property Belonging Marakkal; West Of - Property Belonging Mariappan And Others; South Of - Property Belonging To Kaliappan And Others In S.F.No.96; North Of - Abdul Jaleel; In This Middle:- East West On The North Side - 90 Ft; East West On The South Side – 87 Ft; South North On The Both Side - 50 Ft; Admeasuring 4425 Sq.Ft Or 411.08 Sq.Mtr Of Land With R.C.C.Building With Doors, Windows, Water Connection_ Electricity Connection And Both Deposits, With Using The Rights To Layout Roads Common Usage And Common Pathways Etc., **This Property Is Comprised In At Present Sub Division In S.F.No.96/1C1.**

In Tiruppur Registration District, Tiruppur Joint-1 Sub- Registration District, Tiruppur Taluk, No.11 Chettipalayam Village, In S.F.No.96 At Present Sub Division In S.F.No.96/1 In Acre 5.56 Extent Of Land In 4425 Sq.Ft Of Land Half Share In 2212.5 Sq.Ft Land In Western Side Portion In 1000 Sq.Ft Within The Following Boundaries And Measurements :- East Of – Property Belonging To Sivakami; West Of - Property Belonging To Rajamanickam; South Of - S.F.No.96 And 97; North Of - 20 Ft Width East West Road. In This Middle:- East West On The Both Side - 20 Ft; South North On The Both Side - 50 Ft. Admeasuring 1000 Sq.Ft Or 92.9 Sq.Mtr Of Vacant Land With And Using The Rights To Layout Roads Common Usage And Common Pathways Etc., **This Property Is Comprised In At Present Sub Division In S.F.No.96/1C1.**

**Note:- 1)** The auction sale will be conducted online through the website https://sarfaesi.auctiontiger.net and Only those bidders holding valid Email, ID PROOF & PHOTO PROOF, PAN CARD and have duly remitted payment of EMD through DEMAND DRAFT/ NEFT/RTGS shall be eligible to participate in this **"online e-Auction".**

**2)** The intending bidders have to submit their EMD by way of remittance by DEMAND DRAFT / RTGS/NEFT to: **Beneficiary Name: NIDO HOME FINANCE LIMITED, Bank: STATE BANK OF INDIA Account No. 65226845199 -, SARFAESI- Auction, NIDO HOME FINANCE LIMITED, IFSC code: SBIN0001593.**

**3) Last date for submission of online application BID form along with EMD is 10-08-2026.**

**4)** For detailed terms and condition of the sale, please visit the website **https://sarfaesi.auctiontiger.net or Please contact Mr. Maulik Shrimali Ph. +91- 6351896643/9173528727, Help Line e-mail ID: Support@auctiontiger.net.**

**Mobile No. 9962784954/8667572466** — **Sd/- Authorized Officer**
**Date: 20-07-2026** — **Nido Home Finance Limited**
**(formerly known as Edelweiss Housing Finance Limited)**

## ADITYA BIRLA HOUSING FINANCE LIMITED

ADITYA BIRLA CAPITAL — PROTECTING INVESTING FINANCING ADVISING

**Registered Office- Indian Rayon Compound, Veraval, Gujarat – 362266**
**Branch Office- G-Corp Tech Park, 8th floor, Kasar Wadavali, Ghodbunder Road, Thane, MH-400601**

### DEMAND NOTICE (under Rule 3 (1) of Security Interest (Enforcement) Rules, 2002)

**Substituted Service Of Notice U/S.13 (2) Of Securitisation And Reconstruction Of Financial Assets And Enforcement Of Security Interest Act, 2002.**

Notice is hereby given to the borrowers as mentioned below that since they have defaulted in repayment of the Credit facility availed by them from **Aditya Birla Housing Finance Limited (ABHFL),** their loan accounts have been classified as **Non-Performing Assets** in the books of the Company as per RBI guidelines thereto. Thereafter, ABHFL has issued **demand notices** under section 13(2) of the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (SARFAESI Act) on the last known addresses of the said borrowers thereby calling upon and demanding from them to repay the entire **outstanding amount** together with further interest at thecontractual rate on the aforesaid amount and incidental expenses, cost, charges etc. as stated in the said demand notices. However, the demand notice is also being served by way of publication, as per Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 (SARFAESI Rules):

| Sl. No | Name and Address Borrower/ Co-Borrower and Guarantor / Co-Guarantor & Loan A/C No. | NPA Date | Date of Demand Notice | Amount due as per Demand Notice /as on Date |
|---|---|---|---|---|
| 1 | **1. Yabesh Willson,** Plot No. 2b, S. No. 95/1, Patta S. No. 95/4, 500 M From Sri Sakthy Ganapathy Alayam, Everest Garden Extension Vi, Chennai, Irandamkattalai Village, Kundrathur Taluk, Kancheepuram District, Chengalpattu, Tamil Nadu, 600069. **2. Glory Thirithuvam J,** Plot No. 2b, S. No. 95/1, Patta S. No. 95/4, 500 M From Sri Sakthy Ganapathy Alayam, Everest Garden Extension Vi, Chennai, Irandamkattalai Village, Kundrathur Taluk, Kancheepuram District, Chengalpattu, Tamil Nadu, 600069. **3. Yabesh Willson,** Plot No. 6a, Sri Kothai Avenue Extn Irandamkattalai Kovur, Kundrathur, Kanchipuram, Chennai, Tamil Nadu, 600128. **4. Glory Thirithuvam J,** Plot No. 6a, Sri Kothai Avenue Extn Irandamkattalai Kovur, Kundrathur, Kanchipuram, Chennai, Tamil Nadu, 600128. **5. Yabesh Willson,** C/O: Larsen Tourbo Limited, Tc-1/Tc-3 C-Wing, Tower-B 5th Floor, L&T Construction Campus Mount Poonamallee Road Manapakkam, Chennai, Tamil Nadu, 600125. **6. Glory Thirithuvam J,** C/O: Trinity Travels Plot No. 6a, Sri Kothai Avenue Extension Irandamkattalai, Kanchipuram, Chennai, Tamil Nadu, 600128. **Loan Account No. LNCHN0HL-12240251497 & LNCHN0HL-12240251500** | **09.07.2026** | **14.07.2026** | **Rs. 68,37,555/-** (Rupees Sixty Eight Lacs Thirty Seven Thousand Five Hundred Fifty Five Only) by way of outstanding principal, arrears (including accrued late charges) and interest till 13.07.2026 |

**DESCRIPTION OF IMMOVABLE PROPERTY)PROPERTIES MORTGAGED:** All That Piece And Parcel Of Property Situated At Tambaram Registration District, Pammal Sub Registration, Kanjipuram District, Kundrathur Taluk, Irandamkattalai Village, "Everest Garden Extension Vi Old Sf.No. 95 Old Patta No.1017, Patta Sf.No. 95/1 – New Patta No.2094, New Survey No S.F.No.95/4, Now New Patta No.2746- Plot No. 2b Area 1208 Sqr Feet (Extension Vi, Regularization Ref P.P.D/L No.435/2018), Regularized Approved Planning Permit No.636/2024, Office D.Dis.No.1996/2024/A3, Dated:22.03.2024, Given By Member Secretary, Cmda, Chennai, Tamil Nadu, 600008. **Within The Following Boundaries And Measurements:** North By: Plot No.2a, South By: Plot No.2c, East By: Vacant Lands, West By: 24 Feet Road, **Measuring:** East- West On The Northern Side- 43 Feet. East- West On The Southern Side - 37 Feet 6 Inches, South- North On The Eastern Side - 30 Feet 6 Inches, South- North On The Western Side -30 Feet. Total Extent 1208 Sq Feet. Totally The Site Of 1208 Sq Feet Of Land Along With Building There At With Using The Rights To Layout Roads And Common Pathway Etc. The Property Is Situated Within The Kundarthur (E) Padappai Panchayat Union And Irandamkattalai Panchayat."

We hereby call upon the borrower stated herein to pay us within 60 days from the date of this notice, the outstanding amount (s)together with further interest thereon plus cost, charges, expenses, etc. thereto failing which we shall be at liberty to enforce the security interest including but not limited to taking possaeession of and selling the secured asset entirely at your risk as to the cost and consequences.

Please note that as per section 13(13) of the SARFAESI Act, all of you are prohibited from transferring by way of sale, lease orotherwise, the aforesaid secured assets without prior written consent of the Company. Any contravention of the said section by you shall invoke the penal provisions as laid down under section 29 of the SARFAESI Act and / or any other legal provision in this regard.

Please note that as per sub-section (8) of section 13 of the Act, if the dues of ABHFL together with all costs, charges and expenses incurred by ABHFL are tendered to ABHFL at any time before the date fixed for sale or transfer, the secured asset shall not be sold or transferred by ABHFL, and no further step shall be taken by ABHFL or transfer or sale of that secured asset.

**Date: 20.07.2026** — **Sd/- Authorised Officer,**
**Place: Tamilnadu** — **(Aditya Birla Housing Finance Limited)**

TAMILTH Coimbatore 1 Regional_03 D ARUL SELVAN 215557 50605

KOVAI



கோவை மாநகரில் தெற்கு வடக்காக அமைக்கப்பட்ட தெருக்களில் ஒன்றுதான் சின்னகடைத் தெரு. தற்போது அதன் பெயர் ரங்கே கவுடர் வீதி ஆகும்.

கோவை தடாக கணவாய்க்கு இரு புறங்களிலும் உள்ள மலைச்சரிவுகளில் விழும் மழைநீர், சிறு சிறு பள்ளம் மற்றும் பள்ளத்தாக்கின் வழியே வருவது சங்கனூர் ஓடை ஆகும். நகருக்கு வடக்கே சங்கனூருக்கு அருகே ஓடுவதால் இது சங்கனூர் ஓடை எனப் பெயர் பெற்றது.

### சமீபத்தில் பெய்த மழை காரணமாக

# சிறுவாணி அணை நீர்மட்டம் 21.50 அடியாக உயர்வு

### பில்லூர் அணையில் 83 அடிக்கு நீர் இருப்பு

**கோவை**

சமீபத்தில் பெய்த மழை காரணமாக கோவையின் முக்கிய குடிநீர் ஆதாரமான சிறுவாணி அணையில் நீர்மட்டம் 21.50 அடிக்கு உயர்ந்துள்ளது. இதேபோல் பில்லூர் அணையில் 83 அடிக்கு நீர் உள்ளது.

கோவையின் முக்கிய நீராதாரங்களாக சிறுவாணி மற்றும் பில்லூர் அணைகள் உள்ளன. சிறுவாணி அணையிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு, கோவை மாநகராட்சி மற்றும் மாவட்டப் பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. அதேபோல், பில்லூர் அணையை மையப்படுத்தி பவானி ஆற்றிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. சிறுவாணி அணை கேரள மாநிலம் பாலக்காட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ளது. 49.53 அடி நீர்தேக்க அளவு என்றாலும், 44 அடிக்கு மட்டுமே தண்ணீர் தேக்கப்படுகிறது. இந்நிலையில் கோடை வெயிலின் தாக்கத்தால் சிறுவாணி அணை நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. மேலும், தென் மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவுக்கு பெய்யாததால், கடந்த ஜூன் மாதம் அணை நீர் மட்டம் 7 அடிக்கு கீழ் சரிந்தது. இதனால் அணையில் இருந்து குடிநீர் எடுக்கப்படும் அளவு வெகுவாக குறைக்கப்பட்டது. கோவையில் வழக்கமாக ஜூன் மாத தொடக்கத்தில் பருவ மழை பெய்யும். ஆனால் நடப்பாண்டு எதிர்பார்த்த அளவுக்கு பருவமழை பெய்யவில்லை.

மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் மட்டும் பருவமழை சில நாட்கள் பெய்தன. குறிப்பாக சிறுவாணி அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த வாரம் ஓரளவு நல்ல மழை பெய்தது. இதனால் அணை நீர் மட்டம் 21.50 அடியாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறும்போது, "சிறுவாணி அணையில் இருந்து ஒரு நாளைக்கு 10 கோடி லிட்டர் தண்ணீர் குடிநீருக்காக எடுக்க முடியும். ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு பருவமழை பெய்யாததால் கடந்த ஜூன் மாத தொடக்கத்தில் அணை நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. இதையடுத்து அணையில் இருந்து ஒரு நாளைக்கு 3.50 கோடி லிட்டருக்கு குறைவாக மட்டுமே தண்ணீர் எடுக்கப்பட்டது.

சமீபத்தில் பெய்த மழை காரணமாக அணை நீர்மட்டம் 21.50 அடியாக உயர்ந்துள்ளது. இதையடுத்து குடிநீர் எடுக்கப்படும் அளவு 6 கோடி லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் சிறுவாணி அணையில் 40 அடிக்கும் மேல் தண்ணீர் நிரம்பிக் காணப்பட்டது. பருவமழை தீவிரமாக பெய்தால் மட்டுமே அணை நிரம்ப வாய்ப்புள்ளது. அதேபோல், 100 அடி நீர்த்தேக்க அளவை கொண்ட பில்லூர் அணையில் நேற்றைய நிலவரப்படி 83 அடிக்கு நீர்மட்டம் உள்ளது" என்றனர்.

## ஆடி மாதமும் அம்மன் திருவருளும் - 4

### வெட்டுவானம் எல்லையம்மன்



வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா அருகே சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையையொட்டி வெட்டுவானம் எல்லையம்மன் கோயில் அமைந்துள்ளது.

பாலாற்றின் தென் கரையில் அமைந்துள்ள இந்த கோயிலில் எல்லையம்மன், ரேணுகாதேவியாக அமர்ந்து பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அளித்து வருகிறாள். இப்பகுதி அம்மன் பக்தர்களுக்கு இது சிறந்த பிரார்த்தனை தலமாக இருந்து வருகிறது.

கசக்கால்வாய் சீர்படுத்தும்போது, மண் வெட்டியால் வெட்டுபட்ட அம்மன் சிலையில் இருந்து உதிரம் பெருக்கெடுத்து ஓட, மயங்கி விழுந்த உழவனை மீட்ட ஊர் மக்களுக்கு வெட்டுவானத்தில் எல்லையம்மனாக அமர்ந்து காத்து வருகிறார். மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ஜமதக்கினி–ரேணுகாதேவியின் புராண வரலாற்றை பின்னணியாக கொண்டது இக்கோயில். அம்மை நோய் வந்தவர்கள் கோயிலில் தங்கி குணமடைந்த பிறகு வேண்டுதலை நிறைவேற்றிச் செல்கின்றனர். வேண்டுதல் நிறைவேறியவர்கள் குடும்பத்துடன் அம்மனை வழிபட்டு ஆடு, கோழிகளை பலியிட்டு அங்கேயே சமைத்து பகிர்ந்துண்டு செல்வது வழக்கம்.

தங்கம், வெள்ளி பொருட்களை காணிக்கையாக செலுத்துவதும், குழந்தை வரம் வேண்டுதல் நிறைவேறியவர்கள் மண் சிலைகளை வாங்கி நேர்த்திக்கடன் செலுத்துவதும் வழக்கம். கோயிலின் தல விருட்சமாக பழமையான வேப்பம் மரம் இருக்கிறது. ஒவ்வொரு பவுர்ணமி தினத்தன்றும் நடைபெறும் விசேஷ பூஜையுடன் அனைத்து வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு அபிஷேகமும் அலங்காரமும் செய்யப்படும்.




### கோவை மாநகராட்சி சார்பில்

# தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம் தொடக்கம்

**கோவை**

கோவை மாநகராட்சி சார்பில் தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாமை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவிதேஜா தொடங்கி வைத்தார்.

கோவை மாநகராட்சி பகுதியில் சுமார் 1 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான தெருநாய்கள் உள்ளன. இவை, சாலைகளில் நடந்து செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகனங்களில் செல்வோரை துரத்தி கடிக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த மாநகராட்சி சார்பில், கருத்தடை அறுவை சிகிச்சை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல், தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசியும் செலுத்தப்பட்டு வருகிறது.



கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் முகாமை தொடங்கி வைத்த மாநகராட்சி ஆணையர் கட்டா ரவிதேஜா உள்ளிட்டோர்.

இந்நிலையில், கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் தெருநாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் பணி தொடக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. மாநகராட்சி மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் ஸ்மார்ட்சிட்டி அமைப்பு ஆகியன சார்பில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. மாநகராட்சி ஆணையர் கட்டா ரவிதேஜா பங்கேற்று தடுப்பூசி செலுத்தும் பணியை தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக மாநகராட்சி அதிகாரிகள் கூறும்போது, "ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி அமைப்பு சார்பில், 10 ஆயிரம் தெருநாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசிகள் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் சிறப்பம்சமாக, தடுப்பூசி செலுத்தப்பட்ட ஒவ்வொரு நாயின் விவரமும் வேர்ல்டு வெட்னரி சர்வீஸ் என்ற பிரத்யேக செயலியில் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலம், எந்த நாயும் விடுபடாமல் தடுப்பூசியை முழுமையாக செலுத்தி பாதுகாப்பை உறுதிசெய்ய முடியும். இந்த ஒருங்கிணைந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த முயற்சி, வெறிநோய் தடுப்பிலும், பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பிலும், விலங்கு நலன் மேம்பாட்டிலும் முக்கிய பங்காற்றும்" என்றனர்.

இந்நிகழ்வின்போது, மாநகராட்சி நகர்நல அலுவலர் சுபாஷ் காந்தி, கால்நடை மருத்துவர் வருண், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை அரசு மருத்துவமனை உட்புறத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் சாலையில் வழிந்தோடி அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. அரசு மருத்துவமனை பகுதியிலேயே சுகாதார சீர்கேடு நிலவுவதை தவிர்க்க, மருத்துவமனை மற்றும் மாநகராட்சி நிர்வாகங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

படம்: ஜெ.மனோகரன்

# உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக பெருவாரியான இடங்களில் வெற்றிபெறும்

### முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி நம்பிக்கை

**கோவை**

உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக பெருவாரியான இடங்களில் வெற்றி பெறும் என கோவையில் நடைபெற்ற அதிமுக கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி பேசினார்.

கோவை புறநகர் மத்திய மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கோவை அண்ணா சிலை அருகே உள்ள, மாவட்ட தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அவை தலைவர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். முன்னாள் எம்எல்ஏக்கள் தாமோதரன், கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். புறநகர் மத்திய மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செ.ம. வேலுசாமி கலந்து கொண்டு பேசியதாவது:

அதிமுக ஆலமரத்தை போன்றது. தமிழகத்தை அதிக ஆண்டுகள் ஆட்சி செய்த கட்சி அதிமுகதான். தூய சக்தி என்று கூறிக்கொண்டு தவெக ஆட்சிக்கு வந்துள்ளது. தற்போது அந்த கட்சியில் இருந்த பெண் வழக்கறிஞர் ஒருவரே தமிழகம் முழுவதும் பல லட்ச ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவதாக குற்றம்சாட்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தவெகவுக்கு எதற்காக வாக்களித்தோம் என மக்கள் தற்போது வருத்தப்படுகிறார்கள். விரைவில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளது. இதில் நிச்சயம் அதிமுக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெறும்.

நான் கட்சியில் பதவியில் இல்லாத போது பல்வேறு தரப்பினர் என்னை அவர்களது கட்சிக்கு வரும்படி அழைத்தனர். அவமானங்களை சந்தித்த போதும் வேறு கட்சிக்கு செல்லவில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் அதிமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பாலியல் புகாரில் கைதான காவலர் பணியிடை நீக்கம்

**கோவை**

கோவை துடியலூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வந்தவர் வினோத்குமார் (35). கடந்த 15-ம் தேதி மாலை, வெள்ளக்கிணறு ஹவுசிங் போர்டு பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது அங்கு ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்த இளம்பெண்ணிடம் விசாரணை என்ற பெயரில் காவலர் வினோத்குமார் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது குறித்த புகாரின் பேரில், போலீஸார் வழக்குப்பதிந்து காவலர் வினோத்குமாரை நேற்று முன்தினம் கைது செய்தனர். இந்நிலையில், காவலர் வினோத்குமாரை பணியிடை நீக்கம் செய்து மாநகர காவல் ஆணையர் என்.கண்ணன் உத்தரவிட்டார்.

### கொலை வழக்கில் கைதாகி பிணையில் வெளியே வந்து

# தலைமறைவான இளைஞர் 7 ஆண்டுகளுக்கு பிறகு கைது

**கோவை**

கோவையில் கொலை வழக்கில் கைதாகி, பின்னர், பிணையில் வந்து தலைமறைவான இளைஞர் 7 ஆண்டுகளுக்கு பிறகு கைது செய்யப்பட்டார்.

கோவை பேரூர் அருகே உள்ள, சுண்டக்காமுத்தூர் பேங்க் வீதியைச் சேர்ந்தவர் சின்னப்பன் மனைவி கமலம் (70). இவர் தனியாக வசித்து வந்தார். இவரை, சுண்டக்காமுத்தூர் வையாபுரி வீதியைச் சேர்ந்த கார்த்திக் (39) என்பவர் கடந்த 2017 டிசம்பரில் கொன்று நகையை திருடிச் சென்றது தெரியவந்தது.

இதையடுத்து போலீஸார் கார்த்திக்கை கைது செய்தனர். கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட அவர், கடந்த 2019 மே 1-ம் தேதி பிணையில் வெளியே வந்தார். அதன்



கார்த்திக்

பிறகு தலைமறைவான கார்த்திக்கை போலீஸார் தேடி வந்தனர். இந்நிலையில், காந்திபுரம் பகுதியில் கார்த்திக் சுற்றிக் கொண்டிருப்பதாக பேரூர் போலீஸாருக்கு நேற்று தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீஸார் அங்கு சென்று கார்த்திக்கை கண்டறிந்து கைது செய்தனர்.

இதுதொடர்பாக மாவட்ட போலீஸார் கூறும்போது, "கட்டிடத் தொழிலாளியான கார்த்திக் பிணையில் வெளியே வந்த பிறகு கோவையை விட்டு வெளியேறினார். சென்னை, விழுப்புரம், திருவண்ணாமலை என பல்வேறு இடங்களில் கட்டிட கூலி வேலைக்குச் சென்று வந்தார். சில சமயம் சாமியார் போல் வேடமணிந்தும், ஆதரவற்ற நபர் போன்றும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு சுற்றி வந்துள்ளார்.

இதற்கிடையே, சமீபத்தில் கோவைக்கு வந்த கார்த்திக், அரசு மருத்துவமனை அருகே சாலையோரம் தங்கி, யாசகம் பெற்றும், கூலி வேலைக்கு சென்றும் பிழைத்து வந்துள்ளார். காந்திபுரத்தில் அவர் சுற்றிய போது, போலீஸாரிடம் பிடிபட்டுள்ளார்" என்றனர்.

## வியர்க்குதே

**இன்று**

கூடலூர், சேரம்பாடி மற்றும் உப்பட்டி துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் இந்த துணை மின் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று (ஜூலை 20) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மாவட்ட மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் சங்கர் தெரிவித்துள்ளார்.

**மின் தடை ஏற்படும் பகுதிகள்:** கூடலூர் துணை மின் நிலையத்துக்கு உட்பட்ட கூடலூர், நந்தட்டி, சூண்டி, மரப்பாலம், செம்பாலா, ஓவேலி, 1-வது மைல், 2-வது மைல், காந்திநகர், முதுமலை, அத்திபள்ளி, தொரப்பள்ளி, பாடான்துரை, ஸ்ரீமதுரை, மண்வயல், தெப்பகாடு, பாட்டவயல், நெலக்கோட்டை, கார்குடி மற்றும் தேவர் சோலை.

சேரம்பாடி துணை மின் நிலையத்துக்கு உட்பட்ட சேரம்பாடி டவுன், எருமாடு, சோலாடி, கன்னம்வயல், தாளூர், நாயக்கன்சோலை, பொன்னச்சேரர், கையுன்னி.

உப்பட்டி துணை மின் நிலையத்துக்கு உட்பட்ட உப்பட்டி, அத்திகுன்னா, குந்தலாடி, பொன்னானி, கொளப்பள்ளி, ராக்வுட், தேவாலா, எல்லமாலா, அய்யன்கொல்லி, பந்தலூர், நாடுகாணி.

**நாளை**

கோமங்கலம்புதூர் துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் காரணமாக நாளை (ஜூலை 21) காலை 9 மணி முதல் 4 மணி வரை கீழ்க்கண்ட இடங்களில் மின் விநியோகம் இருக்காது.

கோமங்கலம், கோமங்கலம்புதூர், சங்கம்பாளையம், பண்ணைக் கிணறு, கோழிக்குட்டை, சீலக்காம்பட்டி, முக்கூடு ஜல்லிப்பட்டி, மலையாண்டிப்பட்டணம், கெடிமேடு, கூலநாயக்கன்பட்டி, லட்சுமாபுரம், செட்டிபாளையம், தேவநல்லூர், கோலார்பட்டி, கோலார்பட்டி சுங்கம், நல்லாம்பள்ளி, கஞ்சம்பட்டி,திப்பம்பட்டி, பூசாரிபட்டி.

# கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த வேண்டும்

### எஸ்.பி.வேலுமணி வலியுறுத்தல்

**கோவை**

கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை மத்திய சாலைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் கைவிட்டதாக தகவல்கள் தெரிய வருகின்றன. கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டமானது மதுக்கரையில் தொடங்கி மயிலேறிபாளையம், ஒத்தக்கால் மண்டபம், சூலூர், காரணம்பேட்டை, கணியூர், குன்னத்தூர் வழியாக மேட்டுப்பாளையம் சாலை, நரசிம்ம நாயக்கன்பாளையத்தில் இணையும் வகையில் சுமார் 81 கிலோ மீட்டர் தூரத்துக்கு அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால், விவசாயம், பொறியியல் துறை மற்றும் ஜவுளித்துறை உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களை சேர்ந்தவர்கள் பயனடைவர். இத்திட்ட அறிக்கை தயாரிப்பது தொடர்பாக, தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் முன்னரே தயாரித்த விரிவான திட்ட அறிக்கையானது, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்தால் கைவிடப்பட்டுள்ளது.

கோவை முதல் கரூர் வரையிலான பசுமை வழிச்சாலை திட்டம், கிழக்கு புறவழிச்சாலை திட்டம் ஆகிய இரு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் கோவை, திருப்பூர், கரூர், ஈரோடு, நீலகிரி மாவட்ட தொழில் துறையினர் பயன்பெறுவர். இத்திட்டம் கைவிடப்படாமல் மீண்டும் செயல்படுத்த பரிசீலிக்க வேண்டும்.

கோவை - கரூர் பசுமை வழிச்சாலை திட்டத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை கைவிடுவது கோவை மாவட்ட மக்களுக்கு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

பொதுமக்கள், விவசாயிகள், தொழில் துறையினரின் முக்கிய வேண்டுகோளை ஏற்று, கொங்கு மண்டல மாவட்ட மக்களுக்கு மிகவும் அவசியமான கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்திடம், தமிழக அரசு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## லம்போதரா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

CIN: L17111TZ1994PLC004929

பதிவு அலுவலகம்: 3–A, 3வது தளம், B– பிளாக், பயனீர் அபார்ட்மெண்ட்ஸ், 1075– B, அவிநாசி சாலை, கோயம்புத்தூர் – 641 018. **தொலைபேசி** +91 0422 2249038
**வலைத்தளம்** : www.lambodharatextiles.com; **மின்னஞ்சல்** : cs@lambodharatextiles.com

**அறிவிப்பு**

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 124(6) மற்றும் அதனுடன் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுதல்) விதிகள், 2016–ன் விதி 6–ன் படி, நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் கோரப்படாத / செலுத்தப்படாத ஈவுத்தொகைகளுக்கு உரிய பங்குகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (IEPFA) டீமேட் கணக்கிற்கு மாற்றப்பட உள்ளன. அதன்படி, 2018–19 நிதியாண்டு மற்றும் அதன் பிறகான கோரப்படாத / செலுத்தப்படாத ஈவுத்தொகைகள் தொடர்பான பங்குகள் IEPFA–க்கு மாற்றப்படும். கடந்த ஏழு (7) ஆண்டுகளாக ஈவுத்தொகைகளைக் கோராத / ஈவுத்தொகைகள் செலுத்தப்படாமல் உள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் ஈவுத்தொகைகளைக் கோருமாறு அறிவுறுத்தி, நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அவர்களது சமீபத்திய முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் நிறுவனம் தனிப்பட்ட அறிவிப்புகளை அனுப்பியுள்ளது.

பங்குதாரர்களின் தேவையான நடவடிக்கைகளுக்காக, பெயர், முகவரி, ஃபோலியோ எண் / டீமேட் கணக்கு எண் மற்றும் IEPF கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்களைக் கொண்ட அறிக்கை எங்கள் இணையதளமான www.lambodharatextiles.com–ல் கிடைக்கிறது.

IEPF ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு அத்தகைய பங்குகளை மாற்றுவதற்கான மேற்கண்ட கட்டாயத் தேவையைப் பூர்த்தி செய்ய, காகித வடிவிலான பங்குகளுக்குப் பதிலாக நகல் பங்குச் சான்றிதழை வழங்குதல் / அத்தகைய டீமேட் பங்குகளுக்கு எதிராக கார்ப்பரேட் நடவடிக்கையை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் எடுக்கும். 2018–19 நிதியாண்டு மற்றும் அதன் பிறகான தங்களின் கோரப்படாத / செலுத்தப்படாத ஈவுத்தொகையை கோர, பங்குதாரர்கள் நிறுவனத்தை M/s. லம்போதரா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், 3A, 3வது தளம், B–பிளாக், பயனீர் அபார்ட்மெண்ட்ஸ், 1075–B, அவிநாசி சாலை, கோயம்புத்தூர் – 641018, தொலைபேசி: +91 0422 2249038 / +91 95007 38912, மின்னஞ்சல்: cs@lambodharatextiles.com என்ற முகவரியிலோ அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரையோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து எந்தவொரு சரியான தகவல் தொடர்பும் நிறுவனத்திற்கு வரவில்லை எனில், விதிகளின்படி அத்தகைய பங்குகளை நிறுவனம் IEPF கணக்கிற்கு மாற்றும்.

கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் அத்தகைய பங்குகளின் மீது கிடைக்கும் அனைத்துப் பலன்களும் (ஏதேனும் இருப்பின்) உட்பட அந்தப் பங்குகள் இரண்டையும் திரும்பப் பெறுவதற்கு, மேற்குறிப்பிட்ட விதிகளில் நிபந்தனையிடப்பட்டுள்ளபடி பரிந்துரைக்கப்பட்ட படிவம் IEPF–5–ல் IEPF ஆணையத்திற்கு தனி விண்ணப்பம் செய்வதன் மூலம் கோரலாம் என்பதைப் பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளலாம். மேலும் இந்தப் படிவம் IEPF இணையதளமான www.iepf.gov.in–ல் கிடைக்கிறது. மேற்கண்ட விஷயம் தொடர்பான ஏதேனும் கூடுதல் கேள்விகள் / விளக்கங்களுக்கு, பங்குதாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**லம்போதரா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டிற்காக**
**போஸ்கோ ஜூலியா**
**முழு நேர இயக்குனர்**
DIN: 01898020

**தேதி : 20-07-2026**
**இடம்: கோயம்புத்தூர்**

CB-CB